©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 31] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 11, 2010
ஆடி 26, திருவள்ளுவர் ஆண்டு – 2041

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 183, தொழிலாளர் – வேலைவாய்ப்பு (H1)த் துறை, நாள்: 22 டிசம்பர் 2009.]*

2008ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தம்) (தமிழ்நாடு சட்டம் 35/2009) சட்டத்தின் 1 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர், மேற்சொன்ன சட்டம் 2008 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23 ஆம் நாளன்று செயலுக்கு வருமென இதனால் நிர்ணயிக்கிறார்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 185, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, நாள்: 29 டிசம்பர் 2009.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக்கருதிய திருத்தங்களின் பின்வரும் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு இதனால் பாதிக்கப்படக்கூடிய பொதுமக்கள் அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தி ஐந்து நாட்கள் முடிவடைந்த அன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்சொன்ன வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன 45 நாள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர் யாரிடமிருந்தாவது வரும் மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதுமிருப்பின், இதனை, சென்னை–600 005, சேப்பாக்கம், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மூலமாக சென்னை–600 009, தலைமைச் செயலகம், அரசு முதன்மைச் செயலாளருக்கு இரு நகல்களில் அனுப்பப்படவேண்டும்.

**வரைவு திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 103 B விதிக்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்; அதாவது:—

"103 C அடையாள அட்டை (1) ஒவ்வொரு தொழிற்சாலையின் மேலாளரும், தொழிற்சாலையில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் படிவம் எண் 25C-இல் புகைப்பட அடையாள அட்டை ஒன்றை வழங்க வேண்டும்.

(2) புகைப்பட அடையாள அட்டை தொழிலாளர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் வழங்கப்பட வேண்டும். அதற்கான ஒப்புகையும் பெறப்படவேண்டும்.

(3) புகைப்பட அடையாள அட்டையின் செல்திறன் கால அளவு ஓராண்டாகும். இக்கால அளவு முடிவடைந்த பின்னர் புதிய அட்டை வழங்கப்படவேண்டும்.

(4) புகைப்பட அடையாள அட்டை வழங்கியதற்காக தொழிலாளரிடமிருந்து பெறப்படும் ஒப்புகை ஆய்வாளர் கேட்கும் போது அளிக்கப்படவேண்டும்''.

(2) படிவம் எண் 25B-க்குப் பின்னர் பின்வரும் படிவம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்; அதாவது:—

**"படிவம் எண் 25-C**

(103 C ஆம் விதியின்கீழ் வரையறுக்கப்பட்டது)

**புகைப்பட அடையாள அட்டை**

| | | |
|---|---|---|
| (1) | தொழிற்சாலையின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் | : |
| (2) | தொழிலாளரின் பெயர் | : |
| (3) | தந்தையின்/கணவரின் பெயர் | : |
| (4) | பிறந்த நாள் | : |
| (5) | நிரந்தர முகவரி | : |
| (6) | தற்போதைய முகவரி | : |
| (7) | வேலைவாய்ப்பின் தன்மை | : நிரந்தரமானது/தற்காலிகமானது/ஒப்பந்தம் |
| (8) | இரத்த வகை | : |
| (9) | வழங்கப்பட்ட நாள் | : |
| (10) | செல்திறன் முடிவடையும் நாள் | : |

புகைப்படம்

வைத்திருப்பவரின் கையொப்பம் வழங்கும் அதிகாரிகள்

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

,

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.